**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்கராபுரம்**

**அசல் வழக்கு எண்.246-2015**

2025-ம் ஆண்டு ஜீலை மாதம் 07-ம் நாள் திங்கள்கிழமை வாதி தரப்பு சாட்சியாகிய PW-1 வது நபரின் வாக்குமூலம் (1969-ம் ஆண்டின் 54 வது விதியில் 9-வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு.ர.அந்தோனி ஆனந்த பிரேம், பலகை எழுத்தர் நிலை-III என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.தாவாப்படி தீர்ப்பு வழங்க வேண்டி கேட்டுக்கொள்கிறேன்.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : மரியசெல்வம் | தொழில் | : விவசாயம் |
| தகப்பனார்/கணவர் பெயர் | : ஜேம்ஸ்செல்வராஜ் | வட்டம் | : சங்கராபுரம் |
| கிராமம் | : விரியூர் | வயது | : 54 /2025 |

**முதல் விசாரணை :**

1) நான் இவ்வழக்கில் 1ம் வாதியாவேன். 2ம் வாதி எனக்கு கணவர் ஆவார். நான் என்னுடைய பிரமாண வாக்குமூலத்தை எழுத்து மூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். நான் தாக்கல் செய்யும் ஆவணங்களை வாதி தரப்பு சான்றாவணங்களாக குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

2) 27.09.1993 தேதியில் ஆரோக்கியசாமியிடம் இருந்து தாவா சொத்தை பதிவு செய்யப்பட்ட கிரய பத்திரம் மூலம் பிலோமீனாள் அம்மாள் கிரையம் பெற்றதற்கான கிரையபத்திரத்தின் சான்றிட்ட நகலை தாக்கல் செய்கிறேன் (**அது வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**)

3) 09.06.1999 ம் தேதியிட்டு தாவா சொத்தை வாதிகள் ஆகிய நாங்கள் மேற்படி பிலோமீனாள் அம்மாளிடம் இருந்து கிரையம் பெற்றதற்கான பதிவு செய்யப்பட்ட கிரைய பத்திரத்திற்கான சான்றிட்ட நகலை தாக்கல் செய்கிறேன்(**அது வா.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**)

4) 07.07.2021 ம் தேதியிட்டு தாவா சொத்திற்கு எங்களது பெயரில் வழங்கியுள்ள பட்டா எண்.349 க்கு உரிய பட்டாவின் இணையதளம் மூலம் பெறப்பட்ட சான்றிட்ட நகலை தாக்கல் செய்கிறேன்(**அது வா.சா.ஆ. 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**)

5) 12.09.2008 ம் தேதியிட்டு தாவா சொத்திற்கு எங்களது பெயரில் வழங்கியுள்ள பட்டா எண்.349 க்கு உரிய பட்டாவின் தூய சிட்டாவின் மூலம் பெறப்பட்ட சான்றிட்ட நகலை தாக்கல் செய்கிறேன்(**அது வா.சா.ஆ. 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**)

6) தாவா சொத்திற்கு 15.01.2015 ம் தேதியிட்டு எனது கணவர் பெயரில் செலுத்தப்பட்ட வரி ரசீதின் அசலை தாக்கல் செய்கிறேன்.(**அது வா.சா.ஆ**தாவாப்படி தீர்ப்பு வழங்க வேண்டி கேட்டுக்கொள்கிறேன்.. **5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

7) தாவா சொத்து மற்றும் அதன் உடன் இதாவாப்படி தீர்ப்பு வழங்க வேண்டி கேட்டுக்கொள்கிறேன்.ணைந்துள்ளவீட்டின் மின் இணைப்பிற்கு எனது கணவர் பெயில் செலுத்தப்பட்ட மின் கட்டண ரசீதுகள் அசல்கள் (4 எண்ணிக்கை) தாக்கல் செய்கிறேன். (**அவை 4 எண்ணிக்கை வா.சா.ஆ. 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

8) இணையதளம் மூலம் பெறப்பட்ட தாவா சொத்தின் புல வரைபட நகலை தாக்கல் செய்கிறேன்.(**அது வா.சா.ஆ. 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

9) நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்த அறிக்கை மற்றும் வரைபடத்தை எங்கள் தரப்பு ஆவணங்களாக குறியீடு செய்கிறேன். நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்த அறிக்கை **நீ.ம.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்த வரைபடம் **நீ.ம.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

தாவாப்படி தீர்ப்பு வழங்க வேண்டி கேட்டுக்கொள்கிறேன்.

<u>குறுக்கு விசாரணை</u>

1,2 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணைக்காக வேறு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.

ஒம்/- (செ.பி.பர்வத்ராஜ் ஆறுமுகம், பி.ஏ.,பி.எல்.,)

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

சங்கராபுரம்.